நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

ஆழத்து முத்துக்கள் 19

# 'வில்லிசை வேந்தன்' சின்னமணி

**- சோக்கல்லோ சண்முகநாதன் -**

### வில்லிசைக்கு ஒரு வேந்தன் சின்னமணி

கண்ணகி, சத்தியவான், சாவித்திரி, பட்டினத்தார் இவரது புகழ் சேர்த்த வில்லிசை சில.

வில்லுப்பாட்டில் சின்னமணி ஒரு வரலாற்று நாயகன். திறமையை இவர் வளர்த்துக்கொண்டவர் என்று சொல்வதைவிட இவருக்கு இசையும் நளினமும் உடம்போடு ஒட்டிப் பிறந்தன என்றே கூறலாம். கறுத்த உருவம், திருநீற்றுக்குறியும், சந்தனப் பொட்டும், பூனூலும் பளிச்சென்று தெரியும். குங்குமம் இவருக்கு வாலாயம்.

இவரின் மானசீகக் குரு. கலைவாணர் வில்லிசைக் குழு சின்னமணியை தலைமைப் புலவராகக் கொண்டது. கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களுடைய குழுவில் ஆறு மாதங்களுக்கு மேல் தமிழகத்தில் பணியாற்றியவர். மணிலாவும், சிந்தாமணிக் கடலையும் இன்றுவரை இவரது பிரியமான சாப்பாடு. கடலை கொறித்துச் சாப்பிடும் அளவுக்கு இவரது பல் உறுதியாகவிருக்கிறது, தமிழ்ச் சொல்லைப்போல். என்னுடைய கிராமமாகிய ஏழாலை, மத்தி அரச மகா

மிகவும் பாராட்டுக்குரியவர்கள். 'நாம் இருவர்' என பல இடங்களில் நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றனர்.

நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களுக்கு நடனம், இசை, நடிப்பு இம்மூன்றும் அவர் எடுத்துக்கொண்ட பணிக்கு நன்கு கைகொடுக்கின்றது. இவரது மாமனார் கீதாஞ்சலி வீ.கே.நல்லையா நன்கு நடனம் தெரிந்தவர். அவரிடம் சின்னமணி நடனம் பயின்றவர். காத்தவராயன் கூத்து உட்பட பல நாட்டுக் கூத்துக்களிலும் இசை நாடகங்களிலும் நடித்து நன்கு மெருகேறியவர் சின்னமணி. அவர் உடம்பிலுள்ள ஒவ்வொரு தசைகளும்கூட தாளம்போடும். அம்மன் உடுக்கு இவர்

பெற்றன.

மாதனை மக்கள் மலர் வெளியிட்டு இவரது பவள விழாவை கொழும்பில் கோலாகல-

சுமார் ஐம்பது வருடங்களுக்குமேல் வில்லிசைக் குழுவை நடாத்தி வருவதென்பது ஒரு மகத்தான சாதனை. அதுவும் பேரோடும் புகழோடும் அசைக்கமுடியாத ரசிகர் கூட்டத்தோடும் நடாத்தி வருவதென்பது சாதனைமேல் சாதனை.

கனடாவில் அமரரான வில்லிசைக் கலைஞர் திருப்பூங்குடி ஆறுமுகம் குழுவினரோடு இந்த நா.கணபதிப்பிள்ளை என்ற இளைஞர் பக்கப்பாட்டு, தாளம், நகைச்சுவை என்று இணைந்திருந்தார். வெள்ளை சேட்டும், வேட்டியும் சயிக்கிளுமாக யாழ்.வீதிகளில் இவரைப் பல தடவைகள், நான் பார்த்திருக்கின்றேன். அன்றிலிருந்து இன்றுவரை எனக்கும் உன்மேல் விருப்பம், உனக்கும் என்மேல் விருப்பம் என்று இணைந்திருக்கிறோம். அப்போது அவருக்கு 'மில்க் போர்ட்'' பால்சபையில் வேலை.

இலங்கையில் வில்லிசையின் பிதாமகன் மட்டக்களப்பு மாஸ்டர் சிவலிங்கம். இதை சின்னமணி அவர்களே பல தடவைகள் சொல்லி நான் கேட்டிருக்கின்றேன். ஆனால் வில்லிசையில் இன்றுவரை முடிசூடா மன்னனாகத் திகழ்பவர் சின்னமணி அவர்களே. காண்டாமணிபோல் 'ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே' என்றிருப்பவருக்கு ஏன் சின்னமணி என்று பெயர் வைத்தார்கள் என்று ஒரு நாண்பர் கேட்டார். நானும் அதையேதான் கேட்கிறேன்.

சின்னமணி ஐயா இப்போது எழுபத்துமூன்று வயதைத் தாண்டிச்சென்று கொண்டிருக்கிறார்.

எனக்கு அவரைவிட ஒரு வயது கூட. ஆனால் இன்றும் என்னைத் 'தம்பி' என்று ஆசையோடு கூப்பிடுவார். நான் அதைத் திருத்த முயலவில்லை. கலையுலகில் என்றும் அவர் தம்பியாகவிருக்கவே நான் ஆசைப்படுகின்றேன் - இராம இலட்சுமணர்கள்போல்.

### "பல்லும் சொல்லும் போகாத கலாவிநோதன்"

மாதனையில் பிறந்த இவர் இன்றும் அச்சுவேலயில் வாழ்கின்றார். மாதனை கலைகளின் பிறப்பிடம். அங்குள்ள அம்மனிடம் மாறாத பக்தி பூண்டவர். கண்ணகி இவரது குலதெய்வம். மகளுக்கு கண்ணகி, அச்சகத்திற்குக் கண்ணகி. தென் இந்தியாவில் கண்ணகி சிலை இடம்மாற்றியபோது கண்ணகியாகவே மாறினார். இடதுசாரி என்று தன்னைக் காட்டிக்கொள்ளாவிட்டாலும் இடது பக்கமே இதயமுள்ள ஒரு போற்றுதலுக்குரிய கலைஞர். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்

வித்தியாலயத்தில் படித்தவர். வியக்கும் வண்ணம் ஆங்கிலம் பேச வல்லவர். இங்கு நிகழ்ச்சிக்காக வந்தபோதுகூட கனடா கடுங்



**கலாவிநோதன் சின்னமணி அவர்கள் 1996 முற் பகுதியில் இலங்கை நீர்கொழும்பில் தனது குழுவினருடன் 'கண்ணகி' கதையை வில்லிசையில் சொல்கின்றார். ஹார்மோனியக் கலைஞர் புவி (தற்போது கனடாவில்) பக்கப்பாட்டு கொழும்பு கதிரேசன் தாளத்துடன். கட்டுரை ஆசிரியர் சோக்கெல்லோ சண்முகம் மற்றும் இளம் கலைஞர்கள்**

குளிரிலும் காற்சட்டை அணியாதவர். மயானகாண்ட அரிச்சந்திரன் வீ.வீ.வைரமுத்து, சத்தியவான் - சாவித்திரி யமன் சின்னமணி இரண்டும் இரண்டு முத்துக்கள்.

### இன்றும் யாழ் மண்ணில் "நாம் இருவர்"

மாஸ்டர் சிவலிங்கம், திருப்பூங்குடி ஆறுமுகம், சிறிதேவி வில்லிசைக் குழு, இராஜம் புஸ்பவனம்(காயத்திரி அம்மா) வில்லிசைக் குழு, சபா சதாசிவம் வில்லிசைக் குழு, லடிஸ் வீரமணி வில்லிசைக் குழு, உடப்பு சோமாஸ்கந்தர் வில்லிசைக் குழு, சோக்கெல்லோ சண்முகம் வில்லடிப்பாட்டுக் குழு, சின்னமணி ஐயாவின் கலைவாணர் வில்லிசைக் குழு இவற்றோடு, செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி சுலோசனா பாலசுப்பிரமணியம் போன்ற பெண் வில்லிசையாளர்கள் இந்த மங்கிவரும் கலைத்துறைக்கு வந்தாலும் தொடர்ந்து இயங்கவில்லை. இவ்வளவு பேர் இருந்தபோதும் இப்போது இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து வில்லிசைக் குழுவை நடாத்திவருகின்ற சின்னமணி, சிறிதரன்

கைக்கு மாறுகின்றபோது பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் கலை வரும்.

வேட்டைக்குப் போன இராசாவும் குழுவினரும் பொழுதுபோக்காக வில்லையும் அம்பையும் கிடைத்த பொருட்களையும் வைத்துத் தட்டி தாளம் எழுப்பி, பாடிய பாட்டு இன்று வில்லிசையாக தமிழரின் கலைவடிவமாக மாறியுள்ளது. இத்துறைக்கு வருகின்ற அனைவரையும் நாங்கள் கைகூப்பி வரவேற்கின்றோம்.

இலங்கை இந்து கலாச்சார திணைக்களம் கொழும்பிலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் நடாத்திய பெருவிழாவொன்றிற்கு தென்னிந்தியாவிலிருந்து வில்லிசைக் கலைஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினர் வரைவழைக்கப் பட்டிருந்தனர். ஏதோ காரணத்தால் அவர்கள் வரமுடியாது போய்விட்டது. அந்த இடத்தை யாழ்ப்பாணத்திலிருந்து விமானமூலம் சின்ன மணி குழுவினர் வரவழைக்கப்பட்டு ஈடுசெய்யப்பட்டது.

ஆளுனர் விருது, கலாபூஷணம் விருது உட்பட பல்கலைக்கழகம், தமிழ் மன்றங்கள் இவருக்கு விருது வழங்கி தாம் பெருமை

மாகக் கொண்டாடினர். காத்தவராயன் கூத்து, வில்லிசை அங்கு இடம் பெற்றது.

இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களுமாக (நான்கு) குழந்தைகள். கலைமதி என்றும், கண்ணகி என்றும், கலைச்செல்வன் என்றும், கலைரூபன் என்றும் பெயர் வைக்குமாறு அன்று யாரும் இவரை வலியுறுத்தியிருக்க முடியாது.

மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இவரது வில்லிசை நிகழ்ச்சி மாதக் கணக்கில் நடைபெற்றது. மலேசியாவில் வைத்து சுப்பு ஆறுமுகம் அவர்கள் இவரை வெகுவாகப் பாராட்டினார். பூவோடு கூடிய நார்களாகிய நாங்களும் மணம்பெறுவோம்.

ஆசான்பற்றி எழுதக் கிடைத்தமைக்காக 'தாய்வீடு' பத்திரிகைக்கு நன்றிகள்.



sanmuganathan@thaiveedu.com

ஒவ்வொரு கிராமத்திலும் பல கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அந்தந்தக் கிராமத்தின் வளற்சிப் பணிகளிலும் முன்னேற்றத்திலும் இவர்களின் பங்கு அழப்பரியது. ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலை அவர்களை உலகறியத் தவறிவிட்டது. கலைஞர்கள் நாட்டின் விடியலுக்காய் உழைப்பவர்கள். எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் வாழ்ந்தவர்கள். எம் ஈழத்துக் கலைஞர்களை நாம் கௌரவிப்போம், நினைவுகூர்வோம், உலகறியச் செய்வோம்.

உங்கள் கிராமத்தின் ஒவ்வொரு கலைஞர் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■